**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருப்பூர்.**
**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ** L.L.M.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**

**2024–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22 ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2055, குரோதி வருடம், ஐப்பசி திங்கள் 5ம் நாள்**

**இ.ம.எண்.6982024**
**இன்**
**அ.வ.எண்.178/2023**

1. R. பாலாமணி
2. R. தர்மராஜா ..மனுதாரர்கள்/வாதிகள்

..எதிர்..

1. R. நடராஜன்
2. A. ராமசாமி
3. S. கோவிந்தசாமி
4. G. மணி ..எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 30.09.2024ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.தேவராஜன் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சுப்பராயன் அவர்களும் முன்னிலையாகி நிகழ்த்திய இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1908ம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151ன் கீழ் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u> :–

**2.1** மனுதாரர்கள்/வாதிகளால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 24.06.1970ம் தேதியன்று ஏற்பட்ட விடுதலை ஆவணத்தின் அடிப்படையில் ராக்கியாகவுண்டரின் மனைவி செங்கம்மாள் சொத்தின் உரிமையாளராக இருந்து வந்து, அவரது இறப்பிற்கு பின்னிட்டு மேற்படி ராக்கியாகவுண்டர் மற்றும் 1ம் மனுதாரர் தாவா சொத்தின் முழு உரிமையாளர்கள் ஆவார்கள். கடந்த 24.04.2006ம் தேதியிட்ட விடுதலை பத்திரத்தின் மூலம் மேற்படி ராக்கியாகவுண்டர் அவரது 1/2பாகத்தை 1ம் மனுதாரருக்கு எழுதிக்கொடுத்து விட்டார். அதன்படி தாவா சொத்தின் முழு உரிமையாளர் 1ம் மனுதாரர் ஆவார். தாவா சொத்தின் வடக்கு மற்றும் கிழக்கு பக்கத்தில் சுமார் 10 அடி அளவுள்ள வண்டித்தடம் உள்ளது.

**2.2** தாவா சொத்தின் கிழக்கு மற்றும் வடக்கு பக்கம் கம்பிவேலி போடப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கு கிழபுறம் எதிர்மனுதாரர்களின் சொத்து உள்ளது. மேற்படி கம்பி வேலியை அகற்றிவிட்டு கல்சுவர் எழுப்ப முயற்சி செய்தபோது எதிர்மனுதாரர்கள் ஆட்சேபனை செய்தார்கள். கடந்த 22.08.2023ம் தேதி நிலஅளவையர் துறையில் விண்ணப்பம் செய்ததின் அடிப்படையில் கடந்த 14.09.2023ம் தேதி தாவா சொத்து அளவீடு செய்யப்பட்டு கடந்த 26.09.2023ம் தேதி நிலஅளவையர் வரைபடம் வழுங்கப்பட்டது. மேற்படி அளவீடுக்கு பின்னிட்டு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்து வருவதால், தாவா சொத்தில் மனுதாரர்கள்/வாதிகளின் சுவாதீனத்தையும் அனுபவத்தையும் அசல் வழக்கில் தீர்வு காணும்வரை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்று மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

3. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :–</u>

**3.1** மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று அது சட்டப்படியும் பொருண்மைகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் எல்லைக்குள் மேற்படி கல்சுவர் எழுப்பப்பட்டதால்

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. 9 செண்ட் அளவுள்ள பொது வண்டித்தடத்திற்கு தெற்கே தாவா சொத்து அமைந்துள்ளது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மற்றும் பிரதிவாதிகள் அவர்களது நிலத்திற்கு செல்வதற்கும் அதற்கு மேல் தென்புறம் உள்ள மூன்றாம் தரப்பினர்கள் அவர்களது பூமிக்கு செல்வதற்கும் மேற்படி கிழமேல் வண்டித்தடம் மட்டுமே ஒரே வழித்தடம் ஆகும். மேற்படி கிழமேல் வண்டித்தடத்தை மனுதாரர்கள்/வாதிகள் ஆக்கிரமித்துள்ளார்கள். தாவா சொத்தின் கிழக்கு மற்றும் வடக்கு பகுதியில் மனுதாரர்கள் கூறுவது போல் கம்பி வேலி இல்லை. மனுதாரர்கள் குறிப்பிடும் நில அளவை ஆவணங்கள் மனுதாரர்களால் தயாரிக்கப்பட்ட ஒன்று என்பதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், " மனுதாரர்கள் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

**6. <u>தீர்வு</u> :–**

**6.1** மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், 2ம் மனுதாரரின் தாயார் 1ம் மனுதாரர் என்றும், கடந்த 24.06.1970ம் தேதியிட்ட விடுதலை ஆவணத்தின் அடிப்படையில் 1ம் மனுதாரர் தாவா சொத்தின் உரிமையாளர் என்றும், தாவா சொத்தின் கிழக்கு மற்றும் வடபுற எல்லைகள் கம்பிவேலி போடப்பட்டிருந்தது என்றும், அதனை அகற்றிவிட்டு காம்பவுண்ட் சுவர் கட்டும்போது எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்கிறார்கள் என்றும், வண்டித்தடமானது இம்மனுவின் பிரச்சனை அல்ல என்றும், எல்லைகளை நிர்ணயம் செய்வதே உண்மையான பிரச்சனைக்கான தீர்வு என்றும், எனவே மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2.** எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், தாவா வண்டிப்பாதை 9 செண்ட் அளவு என்பதையும், தாவா சொத்திற்கு கிழபுறம் எதிர்மனுதாரர்களின் சொத்து உள்ளதையும் மனுதாரர்கள் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றும், எதிர்மனுதாரர்கள் 20 அடி ரோட்டிற்காக விட்டுள்ள இடத்தையும் சேர்த்து மனுதாரர்கள் காம்பவுண்ட் சுவர் கட்ட முயற்சிக்கிறார்கள் என்றும், எதிர்மனுதாரர்கள் சொத்திற்கு செல்வதற்கு மேற்படி 9 செண்ட் கிழமேல் வண்டித்தடம் மட்டுமே வழித்தடம் என்பதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** அசல் வழக்கானது தாவா சொத்தில் மனுதாரர்கள்/வாதிகளின் சுவாதீனத்தை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் இருதரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு மனுதாரர்கள்/வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்திற்குள் தான் அவர்களால் காம்பவுண்ட் சுவர் கட்டப்படுகிறதா என்பதை தீர்மானிக்க இயலும் என்பதால் அசல் வழக்கில் கோரியுள்ள பரிகாரத்தை இந்த இடைக்கால மனுவில் வழங்குவது நீதியின்பால் உகந்ததாக இருக்காது என்று முடிவு செய்து மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2024.10.22 17:36:20 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :-</u>**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 24.06.1970 | பாகபாத்திய விடுதலைப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 27.02.2006 | செங்கம்மாள் இறப்பு சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.3 | 10.04.2006 | செங்கம்மாளின் வாரிசு உரிமை சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.4 | 24.04.2006 | பாகபாத்திய விடுதலைப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | 22.08.2023 | சொத்து வரி ரசீது | கணிணி நகல் |
| ம.சா.ஆ.6 | 26.09.2023 | ஆண்டிபாளையம் கிராமம் க.ச.எண்.304/5B புலவரைபடம் | சான்றிட்ட நகல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2024.10.22 17:36:36 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.